


# ST ALBINUS

# *புனித ஆல்பின் (469 – 549)*

இவர் பக்தியுள்ளவர், சந்நியாசியானார். சகல புண்ணியங்களிலும் சிறந்து விளங்கினார். செபத்தை மிக மிக நேசித்தார். புலன்களை அடக்கி ஒடுக்கி வந்தார். சபையின் சட்டங்களுக்கு நுணுக்கமாக கீழ்ப்படிவார். தமக்குள் செத்தவராக, கிறிஸ்துநாதருக்காகவே வாழ்ந்தார். ஆயரான பின் தம் மந்தை ஆடுகளை ஆர்வத்துடன் கண்காணித்து வந்தார். எங்கும் கட்டுப்பாட்டை ஏற்படுத்தினார். இவர் ஆழ்ந்த தாழ்ச்சியுள்ளவர். தம்மை பயனற்ற ஓர் ஊழியனாக கருதுவார் “கடவுளின் ஊழியர்களில் நானே கடையன்” என்பார்.

**சிந்தனை:**

புலன்களை அடக்கி ஒடுக்கி வருகிறோமா என ஒவ்வொரு நாளும் இரவில் நித்திரைக்குச் செல்லுமுன் நம்மை நாமே பரிசோதிப்போம்.

**செபம்:**

ஆண்டவரே, புலன்களை அடக்கி ஆள எங்களுக்கு உதவி செய்யும்.